



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.2.2025) சென்னை, செனாய் நகர் பகுதியில் நடைபெற்ற அரசு விழாவில் 2,500 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு. பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், முனைவர்.தமிழச்சி தங்கபாண்டியன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், டாக்டர்.நா.எழிலன், அ.வெற்றி அழகன், வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், துணை மேயர் மு.மகேஷ் குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நில நிர்வாக ஆணையர், டாக்டர். கே.சு. பழனிசாமி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் ப. மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர் ஜி.எஸ்.சமீரன், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை கூடுதல் செயலாளர் திருமதி.ஆர்.வி.ஷஜிவனா, நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு உள்பட சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## உங்கள் வீட்டுப் பிள்ளைகளை

# ‘பட்டதாரிகளாக’ ஆக்கிய திராவிட மாடல் அரசு, ‘பட்டா’ தாரர்களாவும் ஆக்கி இருக்கிறது!

### சென்னையில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் நிகழ்ச்சியில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

சென்னை,பிப்.22-

**சென்னை,செனாய் நகரில் முதலமைச்சர் அவர்களது உத்தரவின் பேரில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் விழா, நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு, சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த 2,500 பயனாளிகளுக்கு வீட்டுமனைக்கான பட்டாக்களை வழங்கி, வாழ்த்திப் பேசினார். அப்போது அவர், ``பட்டா எனும் கனவை நனவாக்கி, நம் மக்களின் உரிமையை நம் திராவிட மாடல் அரசு நிலைநாட்டி வருவதில் மகிழ்ச்சி கொள்கிறேன். பட்டா பெற்றுள்ள அத்தனைப் பேரையும் வாழ்த்தி மகிழ்கிறேன்” என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

சென்னை அண்ணா நகர் தொகுதி, செனாய் நகரில் 2 ஆயிரத்து 500 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் நிகழ்ச்சியில், உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஏற்கனவே, நம் திராவிட மாடல் அரசு எடுத்த நடவடிக்கையின் காரணத்தால், மாதவரம், சோழிங்கநல்லூர், திருவொற்றியூர், ஆவடி போன்ற இடங்களில் நானே நேரில் சென்று, மக்களுக்குப் பட்டாக்களை வழங்கி வருகிறேன். அதன் தொடர்ச்சியாகத்தான், இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் 2 ஆயிரத்து 500 பேருக்குப் பட்டாக்களை வழங்க இருக்கிறோம்.

**`எல்லோருக்கும் எல்லாம்’**

இன்றைக்கு நம் திராவிட மாடல் அரசைப் பார்த்து, சில பேர் திராவிட மாடல் என்றால் என்ன? என்று கேட்கிறார்கள். ஏழை, எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற இந்த சிறப்பான மேடையில் இருந்து, அதற்கான பதிலைச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன். `இன்னாருக்கு மட்டும்தான் இது’ என்பதற்கு எதிராக, `எல்லோருக்கும் எல்லாம்’ என்று சொல்வதுதான் திராவிட மாடல் அரசு. இந்த இலக்கை நோக்கித்தான், நம் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்.

ஒரு மனிதனுக்கு அடிப்படைத் தேவை என்னவென்று பார்த்தீர்கள் என்றால், மூன்றே விஷயங்கள்தான். உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம். இந்த



மூன்று விஷயங்களுக்காகத்தான், நாம் அனைவரும் பாடுபட்டு உழைத்துக்கொண்டு இருக்கிறோம். இந்த மூன்று விஷயத்தையும் ஒரு மனிதனுக்கு உறுதி செய்வதுதான் நம் திராவிட மாடல் அரசு, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**கிராமங்களில் பஞ்சம் ஒழிந்தது**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் ‘உண்ண உணவு’ என்கிற சிக்கலைத் தீர்த்து வைத்தார். தமிழ்நாட்டில் யாரும் பட்டினியோடு இருக்கக் கூடாது என்றுதான் ஒரு கிலோ அரிசியை, ஒரு ரூபாய்க்குத் தந்தார். இதனைச் செயல்படுத்த, ரேஷன் கார்டு வைத்திருப்பவர்கள், அனைவருக்கும் அரிசி கிடைத்திட நடவடிக்கை எடுத்தார், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர். அதனால்தான் இன்றைக்கு தமிழ்நாட்டில் உள்ள பல கிராமங்களில் பஞ்சம் ஒழிந்தது. பட்டினி இல்லாத நிலை ஏற்பட்டது. உணவுப் பிரச்சினை, அடியோடு தீர்ந்த காரணத்தால், அடித்தட்டு மக்கள், வாழ்க்கையில் முன்னேறி, மற்ற விஷயங்களில் தங்கள் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தார்கள். அடுத்து, பொங்கலுக்கு வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தவர் கலைஞர் அவர்கள். மாற்று உடை இல்லாதவர்களின் நிலைமையை அந்தத் திட்டம் மாற்றிக் காட்டியது. `உடுத்த உடை’ என்பது தமிழ்நாட்டில் ஒரு பிரச்சினையாகவே இல்லை.

**‘இருக்க இடம்’ தேவை**

இப்போது, தமிழ்நாட்டு மக்களுக்கு இருக்கின்ற அடுத்த தேவை என்னவென்றால், `இருக்க இடம்’ என்பதுதான் அவர்களின் தேவை. அதற்கு ஒரு தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்றுதான், நம் முதலமைச்சர் அவர்கள் மும்முரமாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறார்.

முதலமைச்சர் அவர்களது உத்தரவின்படி, பட்டாக்களைக் கொடுப்பதற்காக, நம் வருவாய்த்துறை அமைச்சர் தலைமையில், ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அந்தக்குழு எடுத்த நடவடிக்கைகளால், இன்றைக்கு 89 ஆயிரத்து 400 பட்டாக்கள் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் மட்டும் வழங்கப்பட்டு இருக்கின்றன.

**86 ஆயிரம் பட்டாக்கள்**

அதுமட்டுமல்லாமல், கடந்த வாரம்கூட நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி, அனைத்து அமைச்சர்களையும் வரச் சொல்லி, அனைத்து அரசு அதிகாரிகளையும் வரச்சொல்லி ஆலோசனைகளை வழங்கி, நம் முதலமைச்சர் அவர்கள் ஒரு சிறப்பான, மகிழ்ச்சியான அறிவிப்பை வெளியிட்டார். அது என்னவென்றால், தமிழ்நாடு முழுக்க இருக்கின்ற நகரப் பகுதிகளில் 86 ஆயிரம் பட்டாக்கள் 6 மாத காலத்துக்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுதான் அந்தச் செய்தி. இதை வெற்றிகரமாகச் செய்து முடிக்க, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் குழுக்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் மட்டும் ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும் 29 ஆயிரத்து 187 பேருக்குப் பட்டா வழங்கப்பட உள்ளது. அதேபோல, மதுரை, நெல்லை போன்ற மாநகராட்சிகள், நகராட்சிகள், மாவட்டத் தலைநகரப் பகுதிகளில் மட்டும் 57 ஆயிரத்து 84 பேருக்கு பட்டாக்கள் வழங்கப்பட இருக்கின்றன. ஏறத்தாழ 63 ஆண்டு கால பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுத்துகின்ற வகையில், 86 ஆயிரம் பட்டாக்களை வழங்க, தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தில் முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கி இருக்கிறார். இது, தமிழ்நாட்டின் வரலாற்றில் நிலைத்து நிற்க போகின்ற ஒரு நடவடிக்கை என்பதில், எந்தவித மாற்றுக் கருத்தும் கிடையாது.

திராவிட இயக்கம்தான் நம் ஒவ்வொருவருக்கும் முகவரி கொடுத்த இயக்கம். திராவிட இயக்கம் இல்லாமல் போயிருந்தால், நாம் இன்னும் முகவரி இல்லாத, கல்வி, வேலை வாய்ப்பற்ற மனிதர்களாகத்தான் இருந்து இருப்போம். திராவிட இயக்கம் வந்த பிறகுதான், கல்வி, வேலைவாய்ப்பில், தமிழ்நாடு தன்னிறைவு நிலையை அடைந்து வருகிறது.

உங்கள் வீட்டுப் பிள்ளைகளை `பட்டதாரிகளாக’ ஆக்கிய திராவிட மாடல் அரசு, இன்றைக்கு உங்கள் அனைவரையும் ‘பட்டா’ தாரர்களாவும் ஆக்கிக்கொண்டு இருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புறேன். ஏனென்றால், திராவிட முன்னேற்றக் கழக அரசு, பொறுப்பேற்ற இந்த 4 வருடங்களில் மட்டும், இதுவரைக்கும் 12 லட்சத்து 29 ஆயிரம் பேருக்கு பட்டாக்களை வழங்கி சாதனை படைத்துள்ளது.

**நனவான கலைஞரின் கனவு**

தமிழ்நாட்டில் எந்த ஒரு நபரும் வீடோ, நிலமோ இல்லாமல்

இருக்கக்கூடாது என்கிற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் கனவை நனவாக்கும் வகையில், நம் திராவிட மாடல் அரசும், நம் முதலமைச்சர் அவர்களும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். இந்த நேரத்தில் பட்டாக்கள் வழங்கும் நிகழ்ச்சியைச் சிறப்பாக ஒருங்கிணைத்த அனைத்துத்துறை அரசு அதிகாரிகளுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், நாடாமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். பட்டாக்களை பெற்ற உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் அவர்கள் கூறினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், தமிழச்சி தங்கபாண்டியன், கலாநிதி வீராசாமி, சென்னை மாநகர மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் மாதவரம் சுதர்சனம், எம்.கே.மோகன், தாயகம் கவி, ஆர்.டி.சேகர், ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், கே.பி.சங்கர், எபினேசர், அசன் மௌலானா, மருத்துவர்.எழிலன், ஐட்ரீம்ஸ் மூர்த்தி, பிரபாகர்ராஜா, வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், மாநகரத் துணை மேயர் மகேஷ்குமார், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அமுதா ஐ.ஏ.எஸ்., நிலைக்குழுத் தலைவர் சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் கு.பி.ஜெயின், மாநகராட்சியின் ஆளுங்கட்சித் தலைவர் ராமலிங்கம், சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் ஐ.ஏ.எஸ்., நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் மதுசூதனன் ரெட்டி ஐ.ஏ.எஸ்., சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் துணைச் செயலாளர் சஜீவனா ஐ.ஏ.எஸ்., சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஷ்மி சித்தார்த் ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர் சமீரன் ஐ.ஏ.எஸ்., வட்டாரத் துணை ஆணையர் பிரவீண்குமார் ஐ.ஏ.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர் கீதா, தனசேகரன், பரமசிவம், புழல் நாராயணன், கண்ணன், அகஸ்டின் பாபு, அண்ணா நகர் கார்த்தி, பரிதி இளம்சுருதி உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.



நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் கோயம்புத்தூர் மாநகராட்சி, கொடீசியா அரங்கில் கோயம்புத்தூர், நீலகிரி, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 8 மாவட்டங்களுக்கு உட்பட்ட மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் .சு.முத்துசாமி , தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் .மு.பெ.சாமிநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி செந்தில் பாலாஜி , மனிதவள மேலாண்மை அமைச்சர் .எம்.கயல்விழி செல்வராஜ் , அரசு தலைமைக் கொறடா .கா.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. உடன் அரசு முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை .தா.கார்த்திகேயன் , அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் விஜயகுமார் , தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குனர்கிரண் குராலா , நகராட்சி நிர்வாக இயக்குனர் .சு.சிவராசு உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மு.சண்முகம் எம்.பி. தலைமை ! திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு எழுதிய

# “சுயமரியாதை இயக்க வரலாறு” - இரண்டு பாகங்கள் நூல் -கி.வீரமணி வெளியிடுகிறார்!

## ஆ.இராசா எம்.பி. - பேராசிரியர் சுப.வீரபாண்டியன் - டி.கே.எஸ்.இளங்கோவன் ஆய்வுரை!

சென்னை, பிப்.22-

திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய “திராவிட இயக்க வரலாறு நூல்” (இரண்டு பாகங்கள்) திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் வெளியிட, கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. பெற்றுக் கொள்கிறார். இந் நூல் வெளியீட்டு விழா, வருகிற 22 ஆம் தேதி சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

இது பற்றிய விவரம் வருமாறு :-

திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய “சுயமரியாதை இயக்க வரலாறு” (இரண்டு பாகங்கள்) நூல் வெளியீட்டு விழா இன்று (22.2.2025 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறுகின்றது.

நூல் வெளியீட்டு விழாவிற்கு தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. தலைமை வகிக்கிறார்.

தொ.மு.ச. பேரவை தலைவர் கி.நடராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

நூலாசிரியர் - திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் நூல் அறிமுக உரை நிகழ்த்துகிறார்.

“சுயமரியாதை இயக்க வரலாறு” இரண்டு பாகங்கள் - நூலை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்.

நூலை பெற்றுக் கொண்டு கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரையாற்றுகிறார்.

திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், தி.மு. கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., திராவிடர் கழக பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அ.அருள்மொழி ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துகின்றனர்.

திராவிடர் கழக துணைப் பொதுச்செயலாளர் ச.பிரின்ஸ் என்.ஆர்.எஸ். பெரியார் இணைப்புரை நிகழ்த்துகிறார்.

நக்கீரன் பதிப்பகம் தி.சிற்றரசு நன்றி கூறுகிறார்.



வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களை விழுப்புரம் இல்லத்தில், புதிதாக நியமிக்கப்பட்ட விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு உடனிருந்தனர்.